தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1973 நவம்பர் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Revision of budgetary estimates

* 329 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any communication for the Union Finance Ministry has been received about the need to revise the budgetary estimates of the Government recently; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(இ) இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு, தற்போதுள்ள கணக்கு வகைப்பாட்டு அமைப்பு முறை, கணக்குத் தலைப்புகள் ஆகியவை பற்றி விரிவான ஆய்வு ஒன்றை நடத்தியதோடு (fire-tired) ஐந்து நிலைகள் கொண்ட வகைப்பாட்டை மேற்கொள்ளலாமெனக் கருத்துத் தெரிவித்துள்ளது. இந்த முறையினால் தேசிய அளவில் நிதி வாயில்களில் ஒதுக்கீடு குறித்து மதிப்பீடு செய்வது வசதியாயிருக்கும். ஒரு புறம் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கங்களுக்கும் மற்றொரு புறம் ஐந்தாண்டுத் திட்ட அலுவல்கள், வேலைத் திட்டங்கள், பணித் திட்டங்களுக்கும் இடையே தற்பொழுதுள்ளதைவிட நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தவும், இது வகை செய்யும். மேலும், செலவு குறித்து இனம் வாரியான கட்டுப்பாட்டையும் இது உறுதி செய்யும். இவ்வாறு கட்டுப்படுத்துவது மிகப் பொருத்தமாகும். திருத்தியமைக்கப்பட்ட இந்த வகைப்பாட்டினைத் தணிக்கைத் துறைப்

பெருந்தலைவர் "Comptroller and Auditor General of India" ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த வகைப்பாடு, 1974-75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் முதற்கொண்டு செயலுக்கு வரும். ஆய்வுக் குழு அனுப்பியுள்ள அறிக்கைகளின் படிகள் @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இம்மாதிரி சிபார்சுகள் வந்த பிறகு 1974-75 வரையில் காத்திருக்க வேண்டுமா? 1973-74 பட்ஜெட் தயாரிக்கப்பட்டதே இந்தச் சிபார்சின் அடிப்படையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருந்தால் 1974-75-க்கு உதவியாக இருக்குமே. 1973-74-இலேயே இது ஏன் செய்யப்பட வில்லை என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவை பெரிய அளவில் செய்ய வேண்டிய மாற்றங்களாக இருப்பதால் உடனடியாகச் செய்ய இயலவில்லை. ஆகவே, 1974-75 வரையில் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் மதுவிலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதன் காரணமாக தமிழக வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழாமல் தடுக்க உதவி ஏதேனும் அளிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா? அவ்வாறு கோரியிருப்பின் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையே.

திரு. என். கிட்டப்பா : அதற்காக உதவி ஏதேனும் அளிக்க மத்திய அரசு சம்மதித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கணக்கில் அந்தக் கணக்கு வராது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து இந்தத் தகவல் எப்பொழுது வந்தது என்பதை அறியலாமா?

@ 23—11—1973 அன்று பேரவைமுன் வைக்கப்பட்டன. அவை இத்துடன் இணைக்கப்படவில்லை.

1973 நவம்பர் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தகவல் வந்த தேதியைக் குறிப்பாகச் சொல்ல இயலாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இம்மாதிரி சிறப்பான மாற்றத்தை மற்ற மாநிலங்கள் கைக்கொண்டிருக்கின்றனவா என்பது பற்றிய தகவல் முதலமைச்சரவர்களிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மாற்றமே அகில இந்திய ரீதியில் எல்லா மாநிலங்களிலும் கணக்கு ஒரே நிலையில் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் செய்யப்படுகிற மாற்றமாகும். இதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக, இப்பொழுதுள்ள கணக்குத் தலைப்பின்படி 'ஃபாமிலி ப்ளானிங்' என்று வந்தால் '30-எ' என்ற தலைப்பின்கீழ் கணக்கிடப்படுகிறது. அப்படி இனிமேல் கணக்கிடப்படாமல் எல்லா மாநிலங்களிலும் ஒரே எண்ணின்கீழ்தான் கணக்கிடப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறை கொண்டுவரப் படுகிறது. இப்பொழுது '30-எ' என்ற எண் தமிழ்நாட்டில் 'குடும்பக் கட்டுப்பாடு' என்ற தலைப்புக்கு இருக்கும்போது, ஆந்திரத்திலோ பீகாரிலோ மேற்கு வங்கத்திலோ வேறு எண்ணிலே அந்தத் தலைப்பு இருக்கும். அப்படி இப்பொழுதிருக்கும் நிலையில் அகில இந்திய ரீதியில் கணக்கைச் சரி பார்க்க இயலாத காரணத்தால், எல்லா இடங்களிலும் ஒரே எண்தான் போடப்பட வேண்டும் என்ற வகையிலே இந்த மாற்றங்கள் கொண்டுவரப் படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, டெவலப்மென்ட் எக்ஸ்பெண்டிசரை அதிகமாகப் போட்டு, நான்-டெவலப்மென்ட் எக்ஸ்பெண்டிசரைக் குறைக்க வேண்டுமென்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவை டெக்னிக்கல் மாற்றமே தவிர, இப்படிப்பட்ட மாற்றமெல்லாம் எதுவும் சொல்லப்படவில்லை.